# 9 சிலேடை

சிலேடை என்பது சொல் அணிகளில் ஒன்று. ஒரு சொல்லுக்கு இரு பொருள் வரும் வகையில் பயன்படுத்துவதைக் குறிக்கும். சிலேடை செவிக்கு இனிமையும், கருத்துக்குச் சுவையும் தரக் கூடியதாக அமைகிறது.

அம்மா வாணை என்கிறாய்
அம்மா வருதல் ஒரு பொருள்
அம்மா வாணை சத்தியம்
அம்மா இப்படி இருபொருள்

புத்தியி லாதவன் என்றுநீ
புன் சிரிப்புக் கொள்கிறாய்
புத்திஇல் லாதவன் என்பதனால்
புத்தியில் ஆதவன் ஆகின்றாய்

பழங்கள் என்று சொன்னதும்
பாலர் உள்ளம் சிரிக்கிறார்
பழங்கள் பருகி நிற்பவர்
பாவம் முகத்தைச் சுழிக்கிறார்.

படுக்க வாஎனக் கூறலும்
படுக்க ஓடி வருகிறாய்
படுக்க வா என முடிவிலே
பர பரப்பாய்க் கேட்கிறாய்!

தாவரம் என்றுநீ சாமியைத்
தலை வணங்கிக் கேட்கிறாய்
தாவரம் இந்த உலகினைத்
தழைக்க வைத்துத் தழைக்குது.

### அரும்பதங்கள்

வாணை - வாருங்கள்
ஆணை - சத்தியம், கட்டளை
ஆதவன் - சூரியன்
வரம் - அருள்
தழைக்க - செழிக்க

## கிரகித்தல் பயிற்சி

1. ''புத்திஇல்லாதவன்'' எனும் போது யாது நிகழ்கிறது?
2. குழந்தைகளது உள்ளம் எப்போது சிரிக்கிறது?
3. கவிதையில் கூறப்படும் தாவரத்தின் பயன்பாட்டினைக் குறிப்பிடுக.
4. இக்கவிதை மூலம் ஆசிரியர் வெளிப்படுத்த முனையும் விடயம் யாது?
5. உமக்குப் பிடித்த வரிகளைக் குறிப்பிட்டுக் காரணம் தருக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

பின்வரும் சொற்களை வைத்து இருபொருள் தரும் வகையில் வாக்கியம் அமைக்குக.

1. அம்மாவாணை
   அம்மா வாணை
2. புத்தியில்லாதவன்
   புத்தி இல்லாதவன்
3. படுக்கவா
   படுக்க வா
4. தாவரம்
   தா வரம்

## குழுச்செயற்பாடு

குழுக்களாக இணைந்து இருபொருள் தரும் வகையில் வரும் சொற்களைப் பட்டியற்படுத்துக.